சின்ன சின்னதாய்

● தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

பாலக்கோட்டில் காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

■ தருமபுரி

பாலக்கோட்டில் காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது.

சாலை பாதுகாப்பு மாதத்தையொட்டி காவல்துறை சார்பில் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பகுதியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. பேரணியை பாலக்கோடு டிஎஸ்பி மனோகரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பேரணியில் பாலக்கோடு, மாரண்ட அள்ளி, காரிமங்கலம், மகேந்திரமங்கலம், பஞ்சப்பள்ளி ஆகிய காவல் நிலையங்களில் பணியாற்றும் போலீஸார் பங்கேற்றனர். பேரணி வட்டாட்சியர் அலுவலகம், கடைவீதி, பேருந்து நிலையம், ஸ்தூபி மைதானம், காவல் நிலையம், புறவழிச் சாலை வழியாக சென்று நிறைவடைந்தது. பேரணியின்போது, சாலை பாதுகாப்பை வலியுறுத்தி முழக்கம் எழுப்பப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், காவல் ஆய்வாளர்கள் பாலசுந்தரம், பார்த்திபன், வீரம்மாள், சுப்பிரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொம்மிடியில் நெடுஞ்சாலை துறை பேரணி

பாப்பிரெட்டிப்பட்டி கோட்ட நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பேரணி பொம்மிடியில் நடைபெற்றது. பொம்மிடி நடுர் காவல் நிலையத்தில் இருந்து பேரணி தொடங்கியது. சாலைப்பணியாளர்கள், சாலை ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற இப்பேரணியை உதவி கோட்ட பொறியாளர் சண்முகம் தலைமை வகித்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பேரணியில் உதவி பொறியாளர் நரசிம்மன், பொம்மிடி காவல் நிலைய ஆய்வாளர் விக்னேஷ் மாரப்பன், சாலை ஆய்வாளர்கள் வெங்கடேசன், மாரியப்பன், சிவானந்தம், ராஜாஜி, சுதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

● நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பேரணி பொம் மிடியில் நடைபெற்றது.

ஏரிமலை மலைக் கிராமத்தில் சமத்துவ பொங்கல் விழா; ஆட்சியர் பங்கேற்பு

■ தருமபுரி/ஓசூர்

தருமபுரி மாவட்டம் ஏரிமலை மலைக் கிராம மக்களுடன் மாவட்ட ஆட்சியர் பொங்கல் விழா கொண்டாடி பயனாளிகளுக்கு நலத்திட்டங்களையும் வழங்கினார்.

பென்னாகரம் ஒன்றியம் வட்டுவனஅள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட ஏரிமலை மலைக் கிராமத்தில் 400-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். நேற்று இந்த மலைக் கிராமத்தில் சமத்துவ பொங்கல் விழா நடந்தது. இதில், மாவட்ட ஆட்சியர் சாந்தி பங்கேற்றார்.

தொடர்ந்து, பழங்குடியினர் நலத்துறை சார்பில் 13 பயனாளிகளுக்கு தலா ரூ.4 லட்சத்து 95 ஆயிரம் மதிப்பிலான வீடுகளுக்கான கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து விரைந்து பணிகளை முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அதேபோல, பணி முடிவுற்ற 4 வீடுகளுக்கான சாவிகளை பயனாளிகளிடம் ஆட்சியர் வழங்கினார். தொடர்ந்து, கிராம மக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளையும் வழங்கினார்.

● தருமபுரி மாவட்டம் ஏரிமலையில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு மாவட்ட ஆட்சியர் சாந்தி பொங்கல் தொகுப்பு வழங்கினார். (அடுத்த படம்) ஓசூர் தமிழ்நாடு ஓட்டல் வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடந்தது. இதில், பொங்கல் பானையில் அரிசியையிட்டு விழாவை தொடங்கி வைத்த ஆட்சியர் கே.எம்.சரயு.

பின்னர், ஏரிமலை அரசு உயர்நிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களிடம் உரையாடி அவர்களின் கல்வித் திறனை ஆட்சியர் கேட்டறிந்தார். தொடக்கப் பள்ளியில் வழங்கப்படும் காலை உணவுத் திட்ட உணவையும் ஆட்சியர் ஆய்வு செய்தார்.

ஏரிமலை பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கைகளை பொதுமக்களிடம் ஆட்சியர் கேட்டறிந்தார். ஏரிமலையில் இருந்து அலகட்டு மலைக்கு அமைக்கப்படும் சாலைப் பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர் இந்த சாலை அமைக்க மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மத்திய அரசிடம் இருந்து முதல்நிலை அனுமதியை எதிர்பார்த்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன், மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுருளிநாதன், ஷகிலா, வட்டாட்சியர் லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அதேபோல, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று பிற்பகலில் ஆட்சியர் தலைமையில் பொங்கல் விழா நடந்தது. அதையொட்டி பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஓசூரில் பொங்கல் விழா

சுற்றுலா வளர்ச்சித் துறை சார்பில், ஓசூர் தமிழ்நாடு ஓட்டல் வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடந்தது.

விழாவுக்கு, ஆட்சியர் கே.எம்.சரயு தலைமை வகித்தார். மாநகராட்சி ஆணையர் ஸ்ரீகாந்த் முன்னிலை வகித்தார். பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கேற்று பொங்கல் வைத்தனர். இதையொட்டி, தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் மயிலாட்டம், காளையாட்டம், கரகாட்டம், கோலாட்டம், பம்பை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடந்தன.

மாவட்ட சுற்றுலா அலுவலர் ஆனந்தன், ஓட்டல் மேலாளர் அலெக்ஸாண்டர், உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் முத்து மாரியப்பன், வட்டாட்சியர் சின்னசாமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல, தேன்கனிக் கோட்டை பேரூராட்சி அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடந்தது. இதில், பேரூராட்சித் தலைவர் சீனிவாசன், கவுன்சிலர்கள், பேரூராட்சி ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

கிருஷ்ணகிரி நகரில் களைகட்டிய மண் பானை, கரும்பு விற்பனை

கடை வீதிகளில் அலைமோதிய மக்கள் கூட்டத்தால் நெரிசல்

■ கிருஷ்ணகிரி

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கிருஷ்ணகிரி நகரில் மண் பானை, கரும்பு, பூஜை பொருட்கள் விற்பனை களை கட்டியது. இதனால், கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதியதால், போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது.

தமிழகம் முழுவதும் பொங்கல் பண்டிகை இன்று (14-ம் தேதி) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, கிருஷ்ணகிரி கடைவீதிகளில் பொங்கல் பொருட்கள் விற்பனை நேற்று களைகட்டியது. குறிப்பாக, பொங்கல் பானை மஞ்சள் குலை, கரும்பு, பூஜைப் பொருட்கள், தேங்காய், காய்கறிகள், பனங்கிழங்கு, மண் அடுப்புகள் ஆகியவற்றின் விற்பனை விறுவிறுப்பாக நடந்தன. இதேபோல, வீட்டு முற்றங்களை அலங்கரிக்க வண்ண கோலப்பொடிகள், சாமந்திப் பூக்கள் அடங்கிய மாலைகள், பூக்கள் விற்பனையும் களைகட்டியது.

இதனால், 5 ரோடு ரவுண்டானா, சேலம் சாலை, பெங்களூரு, சென்னை சாலை மற்றும் கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. இக்கூட்டம் காரணமாகப் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது.

மேலும், கிருஷ்ணகிரி கே.தியேட்டர் சாலை, பெங்களூரு சாலையில் உள்ள ஜவுளிக் கடைகள், ரெடிமேட் கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

இதேபோல, கால்நடை களுக்குத் தேவையான மூக்கணாங்கயிறுகள், மணிகள், வண்ண காகிதங்கள் விற்பனையும் நடந்தது.

மேலும், பொங்கல் பண்டிகை விடுமுறையை முன்னிட்டு பலரும் தங்கள் சொந்த ஊர்களுக்கு கார் மற்றும் இருசக்கர வாகனங்களில் புறப்பட்டுச் சென்றனர். பலர் பேருந்துகளில் சென்றதால், பேருந்து நிலையத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதியது. இதையொட்டி, முக்கிய சாலைகளில் போலீஸார் ரோந்து சுற்றிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

மக்களுடன் முதல்வர் முகாம் ஏற்பாடுகளை கோட்டாட்சியர் ஆய்வு

■ அரூர்

பாப்பிரெட்டிப்பட்டி சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட கடத்தூர் ஒன்றியத்தில் வரும் 21, 22-ம் தேதிகளில் மக்களுடன் முதல்வர் திட்ட மூன்றாம் கட்ட சிறப்பு முகாம் நடைபெறுகிறது. இதில் 21-ம் தேதி தாளநத்தம் ஊராட்சி, சிந்தல் பாடி ஊராட்சி, சி.பள்ளிப்பட்டியில் முகாம் நடக்கிறது. 22-ம் தேதி பசுவாபுரம், பாப்பிசெட்டிப்பட்டியில் முகாம் நடைபெறஉள்ளது. இந்நிலையில், முகாம் நடக்கும் இடங்களை அரூர் கோட்டாட்சியர் வெ.சின்னுசாமி நேரில் பார்வையிட்டார். முகாமிற்கான இடங்களில் பொதுமக்கள் மனு கொடுக்க வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி உள்ளிட்ட வசதிகள் உள்ளதா என ஆய்வு செய்தார்.

ஆருத்ரா தரிசனத்தையொட்டி சிவன் கோயில்களில் சிறப்பு பூஜை

■ கிருஷ்ணகிரி/ஓசூர்

ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் உள்ள சிவன் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடந்தன. இதில், திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமியை வழிபட்டனர்.

மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரம் அன்று சிவன் கோயில்களில், ஆருத்ரா தரிசன விழா நடைபெறுவது வழக்கம். அதன்படி, ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரி பழையபேட்டை கிரிஜாம்பாள் சமேத கவீஸ்வரர் கோயிலில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு கணபதி பூஜை, சுத்தி புண்ணியாகம், கலசஸ்தாபனம், கணபதி ஹோமம், ருத்ர ஹோமம், நடராஜ மூலமந்திர ஹோமம் நடந்தது.

நேற்று அதிகாலை 2.30 மணிக்கு சுவாமிக்கு விஷேச திரவிய திருமஞ்சனமும், காலை 7 மணிக்கு திருவெம்பாவை உற்சவம், கோபுரத் தரிசனம், தீபாராதனை, பிரசாத விநியோகம் நடந்தது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

● ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரி பழைய பேட்டை கவீஸ்வரர் கோயிலில் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த சுவாமி. (அடுத்த படம்) ஓசூர் பிருந்தாவனம் நகர் யோகிஸ்வரர் கோயிலில் மலர் அலங்காரத்தில் நடராஜர்.

இதேபோல, கிருஷ்ணகிரி பழையபேட்டை பிரசன்ன பார்வதி உடனுரை சோமேஸ்வரர் கோயிலில், ஏகாதச ருத்ரபாராயணம் மற்றும் உற்சவ நடராஜருக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடந்தன.

தொடர்ந்து மாலை பார்வதி சமேதராய் நடராஜர் சிறப்பு அலங்காரத்தில் நகர் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். மேலும், புதுப்பேட்டை சந்திரமவுலீஸ்வரர் கோயிலில், கோயில் நிர்வாகம் மற்றும் இந்து முன்னணி சார்பில், நடராஜர் ஊர்வலம் நடந்தது. ஐகுந்தம் சீனிவாச பெருமாள் கோயில் வளாகத்தில் உள்ள சிவன் சந்நிதியில் சிறப்பு பூஜைகள் நடந்தன. இதேபோல, மாவட்டம் முழுவதும் உள்ள சிவன் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடந்தன. இதில், திரளான பக்தர்கள் பங்கேற்று வழிபட்டனர்.

ஓசூர் மலைக் கோயிலில்...

ஓசூரில் மலை மீதுள்ள சந்திரசூடேஸ்வரர் கோயில், பிருந்தாவனம் நகர் யோகிஸ்வரர் சிவன் கோயில், ராமநாயக்கன் ஏரி அருகே நஞ்சுண்டேஸ்வரர் கோயில் உள்ளிட்ட கோயில்களில் நேற்று முன்தினம் இரவு கணபதி பூஜை, கலச ஸ்தாபனம், கணபதி ஹோமம், ருத்திர ஹோமம், நடராஜ மூலமந்திர ஹோமம் நடந்தன.

தொடர்ந்து, நேற்று அதிகாலை விஷேசதிரவிய திருமஞ்சனமும், காலை 7 மணிக்கு திருவெம்பாவை உற்சவம், கோபுரத் தரிசனம், தீபாராதனைகள் நடந்தன. இதில், திரளான பக்தர்கள் பங்கேற்று வழிபட்டனர்.

அரசு கேபிள் டிவி ஒயர் துண்டிப்பு தனியார் கேபிள் ஆபரேட்டர் உட்பட இருவர் கைது

■ தருமபுரி

பாப்பாரப்பட்டி அருகே அரசு கேபிள் டிவி ஒயரை துண்டித்த இருவரை போலீஸார் கைது செய்தனர்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் பிளியனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சரவணன். அரசு கேபிள் டிவி ஆபரேட்டரான இவர், பென்னாகரம் வட்ட அரசு கேபிள் டிவி சிக்னல் விநியோகஸ்தராகவும் உள்ளார்.

அருகிலுள்ள பிக்கம்பட்டி கிராம பகுதி மக்கள் இவரிடம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி செட்டப் பாக்ஸ் கேட்டதால் தாளப்பள்ளம் பகுதியில் இருந்து பிக்கம்பட்டி வரை ரூ.50 ஆயிரம் செலவில் 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு கேபிள் அமைத்துள்ளார்.

இந்த கேபிளை கவுரிசெட்டிப்பட்டியைச் சேர்ந்த தனியார் கேபிள் ஆபரேட்டரான யுவாஜ் மற்றும் அவரது உறவினரான ஏட்டு(எ) மாது ஆகிய இருவரும் கடந்த 12-ம் தேதி துண்டித்துள்ளனர். இதைக் கேட்ட சரவணனுக்கு யுவாஜ் கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

ஏற்கெனவே, கேபிள் தொழில் தொடர்பாக சரவணன்-யுவாஜ் இடையே பிரச்சினை இருந்துவருவதும் குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில், அரசு கேபிள் துண்டிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பாப்பாரப்பட்டி காவல் நிலையத்தில் சரவணன் அளித்த புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்ட போலீஸார் யுவாஜ், மாது ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	தற்போதைய நிலுவை தொகை 12.01.2025 அன்று	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	31688640000436 & 31689660000165	1) M/s. Shree Bagavathy Medicals, அதன் பிரதிநிதி உரிமை. திருமதி. சுவர்ணா A N, 2) திருமதி. A N சுவர்ணா உரிமையாளர் M/s. Shree Bagavathy Medicals, மேலும் : M/s. Sri Bagavathy 3) திரு. A R கும்மிரெட்டி	13.01.2024	29.03.2024	ரூ.46,17,133.99 (ரூபாய் நாற்பத்தி ஆறு இலட்சத்து பதினெழாயிரத்து நூற்றி முப்பத்தி மூன்று மற்றும் பைசா தொண்ணூற்றி ஒன்பது மட்டும்)	01.02.2025 காலை 09.30 மணிமுதல் மாலை 05.00 மணிவரை	ரூ. 66,46,000/- (ரூபாய் அறுபத்தி ஆறு இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரம் மட்டும்)	ரூ.6,64,600/- (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து அறுநூறு மட்டும்)	15.02.2025 @ 02:00 PM	14.02.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

பாதுகாப்பு சொத்துக்கள் விவரம்: மூகொண்டபள்ளி கிராமம், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் ஒசூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் மேலும் ஒசூர் முனிசிபால் எல்லைகளுக்குட்பட்ட ச.எண். 131, புதிய துணை பிரிவின்படி ச.எண்.131/23 மற்றும் 131/24, இதில் பரப்பு 1074 சதுர அடி நிலம் மற்றும் ஆர்சிசி கட்டிடம், எல்லைகள் பின்வருமாறு: **கிழக்கு:** திரு.பீரேஷ் அவர்களின் வீடு, **மேற்கு:** திருமதி. பார்வதம்மாள் அவர்களின் வீடு, **வடக்கு:** திரு. சம்பத் குமார் அவர்களின் அதே சர்வே எண் கொண்ட மீதமுள்ள நிலம், மற்றும் **தெற்கு:** சாலை. இந்த எல்லைகளின் அளவுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 28.5 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 32 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 35.5 அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் : 35.5 அடி. மொத்த அளவுகள் பரப்பு 1074 சதுர அடி நிலம் மற்றும் ஆர்சிசி கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளம் அளவுகள் 980 சதுர அடி மற்றும் அனைத்து எளிதான உரிமைகள், சலுகைகள், ஜன்னல்கள், கதவுகள், மின்சார பொருத்துதல்கள், உதிரிபாகங்கள், சுப்பர்ஸ்ட்ரச்சர், மின்சார சர்வீஸ் இணைப்பு எண்கள். 423, 992, 993 மற்றும் 994, கதவு எண்கள். 1/68, 1/68-1, 1/68-2, ஆழ்துளை கிணறு அத்துடன் சப்மெர்சிபல் மோட்டார் மற்றும் தண்ணீர் இணைப்பு, இதர.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. சீனிவாசுல்ரு, தொடர்பு எண். 8142000809. Email id: info@bankauctions.in / srinivas@bankauctions.in.**

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. ரஞ்சன் நாயக், (Mob. No. 6362951653), திரு. உமேஷ் (Mob. No.8050149617) & திருமதி. சைதா (Mob. No. 7400445147)** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 14.01.2025, இடம் : கிருஷ்ணகிரி

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by C.Sridhar at Plot No. 13-D, Bommasandra-Jigani Link Road, KIADB Industrial Area, Bommasandra, Anekal Taluk, Bengaluru -560099 on behalf of KSL MEDIA LIMITED, Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).